Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 516/2023**

**Deposition of PW.6 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நூருல் ஹாசன் | ஜாதி | : | |
| த/பெ | : | முகமது எஹ்யா | தொழில் | : | விற்பனை மேலாளர், தனியார் கம்பெனி |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2026.

(1 முதல் 4 எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டியில் குடியிருந்துகொண்டு தனியார் கம்பெனியில் விற்பனை மேலாளராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் சேர்ந்து தங்கபாண்டி என்பவர் கையெழுத்து செய்தார். மேற்படி கையெழுத்தை கடந்த நவம்பர் மாதம், 2020 ஆம் வருடம் காலை சுமார் 08.30-08.45 மணிக்குள் சின்னாளபட்டியில் உள்ள ஜூவா நகரில், சம்பவ இடத்தில் வைத்து சின்னாளபட்டி காவல்நிலையத்தில் இருந்து வந்த போலிசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விசாரித்து எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து செய்தோம். பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.3/PW.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் வெள்ளைத்தாளில் கையொபப்பம் செய்தீர்களா என்றால் இல்லை எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். நீங்கள் எழுதிய பேப்பரில்

கையொப்பம் செய்திருந்தீர்கள் என்றால் அந்த வழக்கின் குற்ற எண் உங்களுக்கு தெரியுமா என்றால் நாட்கள் ஆனதால் தற்போது நியாபகமில்லை. படம் உங்களுக்கு முன்பாக போலிசார் வரைந்தார்களா என்றால் வரைந்தார்கள். நீங்களும், புகார்தாரரும் உறவினர்கள் என்றால் சரியல்ல எனது நண்பர். மாதிரிவரைபடம் வரைந்தபோது மற்ற நபர்கள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். பார்வைமகசரில் என்ன எழுதியுள்ளளது என்று உங்களுக்கு தெரியாததால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor